**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

FWC

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூலை - 2017
# Term Examination, July - 2017

| வணிகக்கல்வி | புள்ளித்திட்டம் | தரம் :- 12 (2018) |
|---|---|---|

## பகுதி – I

1. 4
2. 2
3. 3
4. 2
5. 4
6. 2
7. 1
8. 3
9. 5
10. 4
11. 2
12. 5
13. 4
14. 5
15. 3

(15×2 = 30 புள்ளிகள்)

16)அ) நுகர்வோர்சந்தை, கைத்தொழில் சந்தை, சேவைச்சந்தை (2x1/2 = 01புள்ளி)
ஆ) வியாபாரம், துணைச்சேவை (2x1/2 = 01புள்ளி)

17)அ) பொருள் உற்பத்தி வணிகம், சேவை உற்பத்தி வணிகம் (2x1/2 = 01புள்ளி)
ஆ) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி
உத்தரவாதத்தால் வரையறுத்த கம்பனி (2x1/2 = 01புள்ளி)

18) அ) வியாபார வங்கிகள், முயற்சியாண்மை மூலதனக்கம்பனிகள் (2x1/2 = 01புள்ளி)
ஆ) கிளைக்கடை (01 புள்ளி)

19) இலத்திரனியல் பணம் (1 புள்ளி)
1. தன்னியக்கரெலர் இயந்திரம் (ATM)
2. இலத்திரனியல் நிதிமாற்று விற்பனை நிலையம் (EFTPOS) (2x1/2 = 01புள்ளி)

20) 1. பிழை 2. பிழை 3. சரி 4. பிழை (4x1/2 = 02புள்ளி)

21) 1. தரமான பொருட்களை வழங்குவதன் மூலம் நுகர்வோரின் நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும்.
2. பொருட்களின் விற்பனை அதிகரிப்பதன் மூலம் கிடைக்கின்ற இலாபம் அதிகரித்தல்.
3. ஒரு தரத்துக் கேற்ப பொருட்களை உற்பத்தி செய்வதற்தனால் செலவு குறைவடைதல்.
(2x1= 02புள்ளி)

22) 1. வணிகக்கருமங்களில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளல்.
2. தனிப்பட்ட இலாபம் பெறாதிருத்தல்.
3. நட்டத்தில் பங்கு பெறல்.
4. போட்டி வணிகங்களில் ஈடுபடாதிருத்தல். (4x1/2 = 02புள்ளி)

23) அ) 1. ஆலோசணைச் சேவை 2. தொழில் நுட்பச் சேவை
3. உட்கட்டமைப்பு வசதிகள் (2x1/2 = 01புள்ளி)
ஆ) 1. அலகு நம்பிக்கை பொறுப்பாளர் 2. நிதிமுகாமைத்துவக் கம்பனி (2x1/2 = 01புள்ளி)

24) அ) 1. இலங்கை புகையிரதத் திணைக்களம் 2. தபால் திணைக்களம்
3. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
4. உணவுத் திணைக்களம் (2x1/2 = 01புள்ளி)

ஆ) 1. சேமிப்பை ஊக்குவித்தல்
2. கடன் வசதிகளை அளித்தல் (2x1/2 = 01புள்ளி)

agaram.lk

25) 1. இறக்குமதிகளை மட்டுப்படுத்தல்.
2. ஏற்றுமதிகளை மட்டுப்படுத்தல்
3. ஏற்றுமதி இறக்குமதிகளை தடைசெய்தல்.
4. வர்த்தக ஒப்பந்தங்கள்
5. இறுக்கமான செலவாணிக் கொள்கை.

(4x1/2 = 02புள்ளி)

## பகுதி – II

01. i) உற்பத்தியாளர்

- தொழிலின் ஒரு பகுதி செய்படாவிடின் ஏனைய எல்லாப் பகுதிகளும் இயங்க முடியாமை.
- ஒரு ஊழியர் விலகினால் அவ்விடத்தை நிரப்புவது சிரமம்
- தொடர்ந்து இயந்திர சாதனங்கள் பயன்படுத்துவதனால் விரைவில் பழுதடையலாம்.

($2\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

ஊழியர்

- சலிப்புத் தன்மை காரணமாகக் குறைவான உற்பத்தித் திறன்.
- தொழில்சார்ந்த நோய்கள் ஏற்படுதல்
- வரையறுக்கப்பட்ட திறன்கள்
- வேறு தொழில் தொடர்பான அறிவைப் பெற்றுக் கொள்ள முடியாமை. ($2\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

ii) நேர் உற்பத்தி
ஒருவர் தனக்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் தானே உற்பத்தி செய்வது நேர் உற்பத்தியாகும். ($\frac{1}{2}$ புள்ளி)

உதாரணம் : தனது நுகர்வுக்கு தேவையான காய்கறிகளை தானே உற்பத்தி செய்தல். ($\frac{1}{2}$ புள்ளி)

நேரில் உற்பத்தி
சந்தைப் படுத்தலுக்காக உற்பத்தி செய்வது நேரில் உற்பத்தி ஆகும். ($\frac{1}{2}$ புள்ளி)

உதாரணம் : விற்பனை நோக்கத்திற்காக காய்கறிகளை உற்பத்தி செய்தல். ($\frac{1}{2}$ புள்ளி)

iii) உற்பத்தி செயன்முறையில் பயன்படுத்தப்படும் பொருட்கள் கைத்தொழில் பொருட்கள் எனப்படும்.
(1 புள்ளி)

பிரதான வகைகள்
1. மூலதனப் பொருட்கள் 2. மூலப்பொருட்களும் உதிரிப்பாகங்களும்
3. விநியோகமும் சேவையும் ($2\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

iv) 1. உற்பத்தியின் தன்மையின் அடிப்படையில்
முதல் நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை
2. உற்பத்தித் துறை அடிப்படையில்
விவசாயம், கைத்தொழில், சேவை
3. உடைமை / உரிமை அடிப்படையில்
தனியார் துறை, பொதுத்துறை (அரசதுறை)
4. நோக்க அடிப்படையில்
இலாப நோக்கம், இலாப நோக்கமற்றது.
5. அளவின் அடிப்படையில்
சிறிய, நடுத்தர, பாரிய

குறிப்பிட (4 =1 புள்ளி)
விபரிக்க (4 =1 புள்ளி)

v) ஒற்றுமைகள்
1. பரிமாற்றம் நடைபெறும்.
2. இரண்டு தரப்பினர் அல்லது அதற்கு மேல் காணப்படல்.
3. மனித தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்யும் ($2\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

agaram.lk

வேற்றுமைகள்

| சந்தை இடம் | சந்தை இடைவெளி |
| --- | --- |
| 1. பௌதிக ரீதியான இடம் காணப்படும் இலத்திரனியல் ஊடாக வணிகம் நடைபெறாது. | 1. பௌதிக ரீதியான இடம் காணப்படாது இலத்தினியல் ஊடாக வணிகம் நடைபெறும். |
| 2. வரையறுக்கப்பட்ட / குறுகிய சந்தை. | 2. பரந்த சந்தை. |

02. i) 1. சந்தையில் நிலைத்திருத்தல்.
2. இலாபத்தை உச்சப்படுத்தல்.
3. விற்பனையை உச்சப்படுத்தல்.
4. சந்தைப்பங்கினை அதிகரித்துக் கொள்ளல்.
5. நுகர்வோர் தேவை விருப்பங்களைப் பூர்த்தி செய்தல்.
6. தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தல்.
7. ஊழியர் நலன்களைப் பேணல்.
8. பொருட்கள் சேவைகளினது தரத்தை மேம்படுத்தல். ($4\times\frac{1}{2}$ = 02 புள்ளி)

ii) 1. உரிய நேரத்தில் பொருட்களை வழங்குதல்.
2. தரமான பொருட்களை வழங்குதல்
3. குறைந்த விலையில் பொருட்களை வழங்குதல்.
4. தொடர்ச்சியாக உரிய நேரத்துக்கு போதுமான அளவு பொருட்களை வழங்குதல்.
5. வழங்கலுக்கான நிபந்தனைகளை விதிக்காமை. ($4\times\frac{1}{2}$ = 02 புள்ளி)

iii) 1. வேலை வாய்ப்பில் பங்களிப்பு செய்தல்.
2. வரி செலுத்துவதை பின் நிற்காது செலுத்துதல்.
3. கழிவுப் பொருள் முகாமைத்துவம்
4. சமூக நலனோம்புச் சேவைகள்
5. பசுமை உற்பத்திகள்
6. சூழலுக்கு நன்மை பயக்கும் வகையில் செயலாற்றல். ($4\times\frac{1}{2}$ = 02 புள்ளி)

iv) 1. நுகர்வோரின் தகவலிற்காக விலைப் பட்டியலை நுகர்வோர் பார்வைக்கு வைத்தல்.
2. அரசினால் S.L.S குறித்த பொருட்களை S.L.S இன்றி விற்பனை செய்யக்கூடாது.
3. பண்டத்தில் குறித்த விலையை விட கூடிய விலைக்கு விற்பனை செய்யக்கூடாது.
4. பண்டத்தை தன்னகத் தேவைத்துக் கொண்டு விற்பனை செய்ய மறுக்கக்கூடாது.
5. பண்டங்களை விற்பனை செய்யும் போது நிபந்தனைகளை விதிக்கக்கூடாது.
6. காலாவதியான பொருட்களை விற்பனை செய்யக்கூடாது. ($4\times\frac{1}{2}$ = 02 புள்ளி)

03. i) அ) 1. முறையான பொருளாதார அபிவிருத்தியும் வளர்ச்சியும்
2. நிறை தொழில் மட்டம்
3. பொருளாதார உறுதிப்பாடு.
4. நியாயமான வருமானப் பரம்பல்.
5. சாதகமான வெளிநாட்டு சந்தை நிலை.
6. நிலையான அபிவிருத்தி ($2\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

ஆ) 1. செலுத்த வேண்டிய வரியை சரியான நேரத்தில் செலுத்துதல்.
2. உற்பத்திக்கு வெளிநாட்டு வளங்களை பயன்படுத்துதல்.
3. வேலை வாய்ப்பினை வழங்குதல்.
4. அரச கொள்கையை பின்பற்றுதல்.
5. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு பங்களிப்பு செய்தல்.
6. புதிய பொருட்களைக் கண்டு பிடித்தல்.
7. சூழலைப் பாதுகாக்கும் முறையில் வணிக நடவடிக்கைகளில் ஈடுபடல்.
8. அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்வதற்கு பங்களிப்பு செய்தல்.

($2\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

agaram.lk

ii) 1. ஏற்றுமதி முன்னரான பரிசோதனை முறைகள்:-
பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்ற முன் அதன் தரத்தை பரிசோதித்தல்.
உதாரணம்:- சிறு ஏற்றுமதி விவசாயப் பொருட்கள் (ஏலம், கறுவா, கராம்பு, சாதிக்காய்)

2. இறக்குமதி பரிசோதனை முறைகள்:-
இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திருத்தச் சட்டத்தின் கீழ் சில பொருட்களின் தரத்தை இறக்குமதிக்கு முன் பரிசோதனைக்கு உட்படுத்தல் தரத்திற்கு குறைந்த பொருட்களின் இறக்குமதியை தடுத்தல் இதன் நோக்கமாகும்.
உதாரணம்:- பழவகை, மின்சார உபகரணங்கள்

3. கடல் உணவுப் பொருட்களுக்கான பரிசோதனை முறைகள்:-
குளிரூட்டிய இறால், நண்டு உற்பத்திகள் ஏற்றுமதி செய்யும் போது சுகாதார பாதுகாப்பு சட்டத்தில் குறித்தபடி தரப்படுத்தல் நிறுவனத்தின் சான்றுப்படுத்தல் அவசியம்.

(குறிப்பிட $2\times\frac{1}{2} = 01$ புள்ளி)

(விபரிக்க. $2\times\frac{1}{2} = 01$ புள்ளி)

iii) 1. உரிமையாளரின் வரையறுக்கப்படாத பொறுப்பு
2. அதிக மூலதனத்தைப் பெற்றுக் கொள்வது சிரமமாக அமைதல்.
3. உரிமையாளரினால் தனித்து தீர்மானம் எடுக்கப்படுவதனால் அது சிலவேளைகளில் பிழையாகலாம்.
4. தனிநபர் என்பதனால் நீண்ட ஆயுள் காணப்பட்டாமை.

($4\times\frac{1}{2} = 02$ புள்ளி)

iv) அ) 1. பங்காளர்ள் 2 – 20 பேர் காணப்படல் வேண்டும்.
2. பங்காளிரிடையே ஒப்பந்தமொன்று காணப்படல் வேண்டும்.
3. ஏதாவது வணிக முயற்சியொன்று நடைபெறல்.
4. இலாபப் பங்கீட்டுக்கான ஒப்பந்த மொன்றிருத்தல்.
5. சகல பங்காளர்களும் தன்னையும் ஏனைய பங்காளர்களையும் பிரதி நிதியொருவராக அல்லது தலைவராக மதித்தல். (4 விடயம் - 1 புள்ளி)

ஆ) 1. எழுத்துமூலம்
2. வாய்மொழிமூலம்
3. நடத்தை மூலம் ($2\times\frac{1}{2} = 01$ புள்ளி)

agaram.lk

v) 1. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்பத்திரம்
2. கூட்டுறவுச் சங்கத்தின் உப விதிகளின் பிரதிகள் இரண்டு.
3. முன் மொழியப்பட்டுள்ள பொருளாதாரக் கருமங்களின் பொருத்தப்பாட்டினைக் காட்டும் அறிக்கை.
4. கூட்டுறவுச் சங்கத்தினைப் பதிவுசெய்வது தொடர்பான முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்ட கூட்டத்தீர்மான அறிக்கை.
5. விண்ணப்பப் பத்திரத்தில் கையொப்பம் வைத்த அங்கத்தவர்கள் அங்கத்தவக் கட்டணம் செலுத்தியதற்கும், அந்நிதி செயற்குழுவின பொறுப்பில் காணப்படுகின்றது. என்பதற்கான செயற்குழுவின் சான்றிழ்.
6. சங்கம் அமைந்துள்ள முகவரியின் அமைவிடத்தைக் காட்டும் வரைபடம்.

($4\times\frac{1}{2} = 02$ புள்ளி)

04. i) 1. அங்கீகாரம் வழங்குபவரின் கட்டுப்பாடு காணப்படுவதனால் அங்கீகாரம் பெறுபவருக்கு பூரண சுதந்திரம் காணப்படமாட்டாது.
2. அங்கீகாரம் வழங்குபவரின் அடிப்படையில் நிறுவனம் காணப்படுவதனால் முதலீடு தொடர்பான நட்ட அச்சம் காணப்படல்.
3. இலாபம் தொடர்பான நிச்சயமற்ற தன்மை காணப்படல்.
4. அங்கீகாரமளிக்கப்பட்ட வணிக முறையினைப் பெற அதிகமான செலவுகளை ஏற்க வேண்டியேற்படும். ($4\times\frac{1}{2} = 02$ புள்ளி)

ii) அ) 1. தனிநபர் திறனில் பயனைப் பெற்றுக் கொள்வதில் சந்தர்ப்பம் கிடைத்தல்.
2. கூடிய அர்ப்பணிப்பிற்கு ஏற்ப அதிக நன்மைகளைப் பெறல்.
3. சமூக அந்தஸ்து அங்கீகாரம் அதிகரித்தல்.
4. தனிப்பட்ட நிதி இலாபம் ($2\times\frac{1}{2} = 01$ புள்ளி)

ஆ) 1. புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்படல்.
2. வருமானத்துக்கான சந்தர்ப்பந் தோன்றுதல்.
3. புதிய பொருட்கள் சேவைகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் கிடைக்கப்பெறல்.
4. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைதல்.
5. நிலை தொழில் மட்டம் உருவாகுதல்.
6. பிரதேச வளங்கள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படல்.
7. புதிய சந்தைகள் அபிவிருத்தியடைதல். ($2\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

iii) சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகளை தேடுவதின் பெறுபேறாக உருவாகும் முயற்சியாண்மை. (1 புள்ளி)

உதாரணம் -
1. கழிவுகளை அகற்றும் பிரச்சினைக்கு இயற்கைப் பசளை உற்பத்தி.
2. இலையான, நுளம்புப் பெருக்கத்திற்கு பல்வேறு தீர்வுகளை முன்வைத்தல்.
3. எரிபொருள் பிரச்சினைக்கு பல்வேறு அடுப்புகளை உருவாக்குதல். ($2\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

iv)

| கடன்கள் | மேலதிகப்பற்றுக்கள் |
|---|---|
| 1. குறித்த தொகையை குறித்த காலத்தில் பெற்றுக் கொள்ளல்<br>2. வங்கி வங்கி அல்லாத நிதி நிறுவனதிடம் பெற்றுக் கொள்ளல்.<br>3. கடன் தொகையில் ஒரு தொகையையும் வட்டியையும் சேர்த்து செலுத்தவேண்டும்.<br>4. குறித்த காரணங்களுக்கு மட்டும் வழங்கப்படும்.<br>5. செலவு அதிகம், வட்டி குறைவு. | 1. தேவைக்கேற்ப வேறுபட்ட தொகைகளை குறுங்காலத்தில் பெறல்<br>2. வர்த்தக வங்கியில் நடைமுறைக் கணக்கு இருந்தால் மட்டும் பெறலாம்.<br>3. ஒப்பந்தப்படி செலுத்த முடியும்.<br>4. அவ்வாறில்லை.<br>5. செலவு குறைவு, வட்டி வீதம் அதிகம் |

($4\times\frac{1}{2}$ = 02 புள்ளி)

v) 1. தரவுகள் அழிவுறக்கூடிய தன்மை காணப்படல்.
2. புதிய வடிவமைப்பில் இலத்திரனியல் மோசடிகளுக்கு உட்படக்கூடிய நிலமையும் ஏற்படலாம்.
3. மேலதிக செலவொன்றைப் பொறுப்பேற்க வேண்டி ஏற்படும்.
4. அனைத்து விற்பனை நிலையங்களிலும் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியாது.

($4\times\frac{1}{2}$ = 02 புள்ளி)

agaram.lk

05. i) அ) பல்வேறு நட்ட அச்சங்களிற்கு முகம் கொடுத்துள்ள காப்புறுதி செய்பவர்கள் மூலம் காப்புறுதிக் கம்பனிக்கு செலுத்தப்படும் தவணைக் கட்டணத்தினால் காப்புறுதி நிதியம் உருவாக்கப்படுகின்றது. தவணைப் பணத்தை செலுத்தும் நபர்களுக்கிடையிலான யாரேனும் ஒருவருக்கு ஏற்படும் நட்டத்திற்காக காப்புறுதிக் கம்பனியானது அந்நிதியத்தின் மூலமே வழங்குகின்து அதுவே “இடர்களை ஒன்றிணைத்தல்” ஆகும்.

ஆ) வணிகங்களால் தாங்கிக் கொள்ளவேண்டியேற்படக் கூடிய பாரியளவிலான நட்டங்களுக்காகக் காப்புறுதிக் கம்பனியிடமிருந்து இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்ள முடிவதால் வணிகம் இயல்பு நிலைக்கு மாற்றப்பட்டு அதன் கருமங்களை தொடர்ச்சியாக நடத்திச் செல்ல உறுதுணையாக இருக்கின்றது.

(01 புள்ளி)

ii) 1. பூரண மோட்டார் வாகனகாப்புறுதி:
மோட்டார் வாகனம் அதில் பயணிக்கும் பயணிகள் வெளித்தரப்பினர் மற்றும் சகல ஆதனங்களுக்குமான சேதங்களை ஈடுசெய்யமுடியும்.
2. 3ம் நபர், தீ மற்றும் களவு அபாய காப்புறுதி:
குறித்த வாகனத்திற்கு தீயாலும் களவபாயங்களாலும் ஏற்படும் இழப்பிற்கும் வெளிநபர்களிற்கும் ஆதனங்களிற்குமான சேதங்களை ஈடுசெய்ய முடியும்.
3. ஆகக்குறைந்த 3ம் நபர் காப்புறுதி:
வெளித்தரப்பினருக்கும், ஆதனங்களுக்குமான சேதங்களை மட்டும் ஈடுசெய்ய முடியும்.

(2 குறிப்பிட்டால் $\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

(2 விளக்க $\times\frac{1}{2}$ = 01 புள்ளி)

iii)

| இடர்கள் | காப்புறுதிப் பத்திரம் |
|---|---|
| 1.ஆயுளுக்கு | 1. ஆயுள் காப்புறுதி |
| 2.மோட்டார் வாகனம் | 2. பூரணமான மோட்டார் வாகனகாப்புறுதி |
| 3.இயந்திரம், கட்டடம், உபகரணம் | 3. தீக் காப்புறுதி |
| 4.ஊழியர் | 4. ஊழியர் பொறுப்புக் காப்புறுதி |
| 5.பணம், பொருள் | 5. கள்வர் பயக்காப்புறுதி |
| 6.இயற்கை அழிவுகள் | 6. இயற்கை அழிவுக் காப்புறுதி |

(4 $\times \frac{1}{2}$ = 02 புள்ளி)

iv) 1. உற்பத்திளானிற்கு இடம் தொடர்பான திருப்தி ஏற்படும்.
2. வணிகத்திற்கு தேவையான ஊழியர்களையும் மூலப்பொருட்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
3. பொருட்களின் விநியோகத்தை விரைவாக மேற்கொள்ளலாம்.
4. பொருட்களின் பழுதடையும் தன்மை குறைவடையும்.
5. பொருட்களை நுகர்வோனின் இடத்தில் ஒப்படைதல்.
6. உற்பத்திச் செலவை இழிவுபடுத்திக் கொள்ள. (4$\times \frac{1}{2}$ = 02 புள்ளி)

v) 1. பிரயாணத்தின் கடைசித்துவாரம் வரை செல்ல முடிதல்.
2. தேவைக்கேற்ப ஊடகத்தினை தெரிவு செய்ய முடிதல்
3. எவ்வேளையிலும் பயன்படுத்தக்கூடியதாக இருத்தல்.
4. குறுகிய தூரப் பயணத்திற்காக வேகமான முறையொன்றாயிருத்தல். (4$\times \frac{1}{2}$ = 02 புள்ளி)

06. i) 1. வியாபாரக் கொடுக்கல் வாங்கலின் போது உரிய தரப்பினர்களிடையே கருத்துக்களை பரிமாற்றிக் கொள்வதற்காக.
2. உரிமையாளர் ஊழியர் தொடர்பினைப் பேணுவதற்காக
3. விற்பனை மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக
4. மனித, பௌதீக வளங்களைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்வதற்காக.
5. சமூக ரீதியாக சகல செயற்பாடுகளுக்கும் தொடர்பாடல் முக்கியத்துவமுடையது.

(4$\times \frac{1}{2}$ = 02 புள்ளி)

ii)

அ) 1. கூட்டங்கள் நேரடியாக எல்லாப்பிரச்சினைகளையும் கலந்துரையாடி தீர்க்கக்கூடியன.
2. தொடர்புபடுபவருக்கிடையிலான கால தாமதம் குறைக்கப்படும்.
3. புரிந்துணர்வுகளை வளர்க்கின்றது.
4. கூட்டுத் தீர்மானங்களிற்கு எல்லாத் தரப்பினரையும் பிரச்சினையின்றி இணங்க வைக்கின்றது.

(2$\times \frac{1}{2}$ = 01 புள்ளி)

ஆ) 1. இலத்திரனியல் தபால்
2. தொலைநகல் (பக்ஸ்)
3. குறுஞ்செய்தி சேவை(S.M.S)
4. சமூக வலையமைப்பு சேவை (2$\times \frac{1}{2}$ = 01 புள்ளி)

iii) அனுகூலம்:
1. பொருட்களை விநியோகிப்பது இலகுவாக அமைதல்.
2. தமது பொருட்களை அறிமுகப்படுத்துவது இலகுவாக அமைதல்.
3. உற்பத்தியாளரின் கருமங்கள் இலகுவாதல்.
4. சந்தை தகவல்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும். (2$\times \frac{1}{2}$ = 01 புள்ளி)

பிரதிகூலம்
1. சந்தையில் தேவையற்ற வகையில் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படக்கூடியதாயிருத்தல்
2. பொருட்களின் விலைமட்டம் உயர்வடைய கூடியதாகவிருத்தல்.
3. விலை அதிகரிப்பின் ஊடாக கேள்வி குறைவடைந்து விற்பனை வீழ்ச்சியடையலாம்.

(2$\times \frac{1}{2}$ = 01 புள்ளி)

agaram.lk

iv) 1. வெளிநாட்டு வழங்குநர் தொடர்பாடன விபரங்களைப் பெற்றுக் கொள்ளல்.
2. விலை விசாரணைக் கடிதம் அனுப்புதல்.
3. விலை கூறலின் பின்னர் பொருளை இறக்குமதி செய்வது தொடர்பாகப் பொருத்தமான தீர்மானத்திற்கு வருதல்.

4. இறக்குமதி அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய பொருட்கள் தொடர்பில் இறக்குமதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
5. கட்டளையை வெளிநாட்டு ஏற்றுமதி யாளருக்கு அனுப்புதல்
6. ஏற்றுமதியாளருக்கான கொடுப்பனவு தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
7. இறக்குமதிப் பண்டம் துறைமுகத்திலற்கு வந்த பின்னர் அவற்றை விடுவித்தல்.

($4 \times \frac{1}{2} = 02$ புள்ளி)

v) அ) 1. எல்லாப் பொருட்களையும் ஒரே நாட்டில் உற்பத்தி செய்யமுடியாமை.
2. சில பொருட்கள் சில நாடுகளில் மாத்திரம் மலிவாக உற்பத்தி செய்ய முடிதல்.
3. உற்பத்திக்கான மூலவளங்களும் நிலமைகளும் சில நாடுகளில் மாத்திரம் காணப்படல்.
4. உற்பத்தி செய்த மேலதிகப் பண்டங்களை விற்பனை செய்ய,

($2 \times \frac{1}{2} = 01$ புள்ளி)

ஆ) ஏற்றுமதியாள னொருவனால் இறக்குமதியாள னொருவனுக்கு பண்டங்களுக்கான பணத்தினைச் செலுத்துவதற்காக வழங்கப்படுகின்ற ஆவணமொன்றாகும். பொதுவாக இறக்குமதியாளனின் கோரிக்கைக் கேற்ப அவரின் வங்கியினால் நாணயக் கடிதம் வழங்கப்படும்.

(01 புள்ளி)

agaram.lk